செய்தி வெளியீடு எண்.75 நாள்.03.02.2017

# திருவள்ளூர் மாவட்டம் திருவொற்றியூர் வட்டம் எர்ணாவூர் பகுதியில் கப்பலில் இருந்து கசிந்து கரை ஒதுங்கிய கச்சா எண்ணெய் அகற்றும் பணி நடைபெறுவதை மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

~~~~~

திருவள்ளூர் மாவட்டம் திருவொற்றியூர் வட்டம் எர்ணாவூர் பகுதியில் கப்பலில் இருந்து கசிந்து கரை ஒதுங்கிய கச்சா எண்ணெய் அகற்றும் பணி நடைபெறுவதை மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.02.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறியதாவது “இன்று வரை 72 டன்களுக்கும் அதிகான கச்சா எண்ணெய் அப்புறபடுத்தப்பட்டுள்ளது. இப்பணியில் 702 நபர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கே.வி.கே.குப்பம் பகுதியில் கரை ஒதுங்கிய எண்ணெய் படலத்தை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. கடல் நீரில் மிதக்கும் கச்சா எண்ணெய் அகற்றப்பட்டவுடன் பாறைகளில் படிந்துள்ள எண்ணெய்களை கரையோர காவல் படை மற்றும தீயணைப்பு துறை இணைந்து எண்ணெய் அகற்றும் பணிகளை மேற்கொள்வார்கள். போர்க்காள அடிப்படையில் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. இப்பணிகளில் மாவட்ட நிர்வாகத்துடன் மீன்வளத்துறை, சுற்றுச்சூழல் துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், நெடுஞ்சாலைகள் துறை, ஊரக வளர்ச்சித்துறை போன்ற 20க்கும் மேற்பட்ட துறைகளை சேர்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இப்பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு காலுரை, கையுரை மற்றும் உடைகளுடன் இப்பணிகளில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர், மற்றும் நடமாடும் நவீன கழிவறை ஊர்திகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளது என்று கூறினார்.

இவ்வாய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்**
~~~~~